**வாடகைக் கொடுப்பனவு நெகிழ்தன்மை**
**அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் | ஏப்ரல் 2020**

Toronto Community Housing

---

COVID-19 காரணமாக வேலை வருமானத்தை இழந்த, ஒரு வருமானத்திற்கேற்ற வாடகை (RGI) அல்லது சந்தைநிலை வாடகைக் குடியிருப்பாளராயின், நீங்கள் வாடகை நெகிழ்ச்சித் திட்டத்திற்குத் தகைமை பெறுவீர்கள். வருமானம் எதனையும் இழக்கவில்லையாயின், நீங்கள் தகைமை பெற மாட்டீர்கள் என்பதுடன் உங்கள் முழு வாடகையும் மாதத்தின் முதல் திகதி தொடர்ந்து கொடுக்கப்படல் வேண்டும்.

**'வாடகை நெகிழ்தன்மை' என்பதன் பொருள் என்ன?**

COVID-19 காரணமாக வேலை வருமானத்தை இழந்த குடியிருப்பாளர்களிடத்து நாம் நெகிழ்தன்மை கொண்டிருப்போம். பாதிக்கப்பட்ட RGI குடியிருப்பாளர்களுக்கு நாம் வாடகைக் கொடுப்பனவுகளை மீண்டும் கணிப்போம். சந்தைநிலை வாடகைக் குடியிருப்புகளுக்கு நாம் அவர்களது வாடகையின் ஒரு பகுதியை மூன்று மாதங்கள் வரை தள்ளிப்போடும் வாய்ப்பை வழங்குவோம்.

**RGI குடியிருப்புகளில் வாழும் குடியிருப்பாளர்களுக்கு எவ்வாறு நீங்கள் உதவுவீர்கள்?**

RGI குடியிருப்புகளுக்கு, TCHC வேலை வருமானத்தில் ஏற்பட்ட மாற்றத்திற்கேற்ப மீண்டும் உங்கள் வாடகையைக் கணிக்கும்..

**இந்தச் செயன்முறை எனது வருடாந்த வாடகை மீள்பார்வையைப் பிரதியீடு செய்யுமா?**

இல்லை. இந்தச் செயன்முறை COVID-19 காரணமாக வேலை வருமானத்தை இழந்தவர்களும் இந்த வாடகை நெகிழ்ச்சித் திட்டத்திற்கு விண்ணப்பிக்க விரும்புபவர்களுக்கும் உரியது.

குடியிருப்பாளர்களுக்கான தகவலுடன் ஏப்ரல் முற்பகுதியில் ஒரு தபால் பொதி ஒவ்வொரு TCHC குடியிருப்புக்கும் அனுப்பப்பட்டது. இந்தப் பொதி வாடகை மீள்பார்வையின்போது பயன்படுத்தப்படும் குடியிருப்பின் வருமானம் மற்றும் சொத்து மீள்பார்வைப் படிவத்தை உள்ளடக்கியிருந்தபோதிலும், இது உங்கள் குடியிருப்புக்கான வருடாந்த வாடகை மீள்பார்வை அல்ல.

உங்கள் குத்தகை ஆண்டு முடிவு திகதிக்கு 6 மாதங்களுக்கு முன்னர் உத்தியோகபூர்வ வாடகை மீள்பார்வைப் பொதி உங்கள் குடியிருப்புக்குத் தபாலில் அனுப்பிவைக்கப்படும். இது உங்கள் வருடாந்த வாடகை மீள்பார்வை என்பதை உங்களுக்குத் தெரிவிக்கும். ஒரு விபரமான முகப்புக்கடிதத்தை இந்தப் பொதி

உள்ளடக்கும். இந்தப் படிவங்கள் எப்போது மீண்டும் தரப்படவேண்டும் மற்றும் படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கு எவ்வாறு உதவி பெறலாம் என்பது பற்றியும் இது தெரிவிக்கும்.

**சந்தை வாடகைக் குடியிருப்புகளுக்கு நீங்கள் எவ்வாறு உதவுவீர்கள்?**

கட்டுப்படியாகும் வாடகைக் குடியிருப்புகள் உட்பட, பாதிக்கப்பட்ட சந்தை வாடகைக் குடியிருப்புகளுக்கு, அவர்களது வாடகையின் ஒரு பகுதியைப் பிற்போடும் தெரிவுகளை TCHC வழங்குகிறது. குடியிருப்புகள் தமது வாடகையின் மூன்றிலொரு, அரை அல்லது முக்கால் பகுதியை ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் கொடுக்கலாம், பிறகு மிகுதிப் பணத்தை அடுத்த ஆறு முதல் எட்டு மாதங்களில் தமது வழக்கமான முழு வாடகையுடன் மேலதிகக் கட்டணமாகச் செலுத்தலாம்.

**யார் இந்தத் திட்டத்திற்குத் தகைமை பெறுவார்கள்?**

COVID-19 காரணமாக வேலை வருமான இழப்பைக் காண்பிக்கக்கூடிய அனைத்துக் குடியிருப்பாளர்களும் தகைமை பெறுவர். RGI குடியிருப்புகளுக்கும் (கட்டுப்படியான வாடகைக் குடியிருப்புகள் உட்பட) சந்தை வாடகைக் குடியிருப்புகளுக்கும் வெவ்வேறான அணுகுமுறைகளை நாம் கடைப்பிடிப்போம். வேலை வருமான இழப்பு இல்லாத குடியிருப்புகள் இந்த வாடகை நெகிழ்ச்சித் திட்டத்திற்குத் தகைமை பெற மாட்டார்கள்.

**நான் தகைமை பெறுவதை எவ்வாறு நிரூபிப்பது?**

RGI மற்றும் சந்தை வாடகைக் குடியிருப்புகள் இருசாராரும் தமது வருமான இழப்பினைக் காட்டும் பத்திரங்களை வழங்க வேண்டும். உங்களிடம் பத்திரங்கள் இல்லாவிடில் நாம் உங்களோடு சேர்ந்து தொழிற்படுவோம் ஆனால் நீங்கள் அவற்றைப் பெற்றதும், திட்டத்தில் தகைமை பெறுவதைத் தொடர, அவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

நீங்கள் வழங்கும் பத்திரங்கள் உங்கள் வாடகை அதிகமாக இருந்திருக்கவேண்டும் எனக் காண்பித்தால் உங்களிடம் அந்தக் கடந்தகால வாடகை அறவிடப்படும்.

**நான் ஒரு கட்டுப்படியாகும் வாடகைக் குடியிருப்பாளர். எனக்கு ஏதேனும் உதவி உண்டா?**

ஆம். COVID-19, காரணமாக வருமான இழப்பு உங்களுக்கு ஏற்பட்டிருந்தால், சந்தை வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு நாம் வழங்கும் வாடகை பிற்போடல் தெரிவுகளுக்கு நீங்களும் தகைமை பெறுவீர்கள்.

**இதற்கான செயன்முறை என்ன? நான் எவ்வாறு விண்ணப்பிக்கலாம்?**

நீங்கள் உங்கள் வாடகை நிலைமை பற்றிய படிவத்தைப் பூர்த்தி செய்து உங்கள் வருமானம் அல்லது வேலை இழப்பினை உறுதிப்படுத்தும் பத்திரங்களுடன் TCHC க்குத் திருப்பித் தரவேண்டும். உங்களது புதிய வருமான நிலை பற்றிய விபரங்களைத் தரும் குடியிருப்பு வருமானம் மற்றும் சொத்து மீள்பார்வைப் படிவத்தையும் RGI குடியிருப்புகள் பூர்த்தி செய்ய வேண்டும்.

வருடாந்த வாடகை மீள்பார்வைச் செயன்முறையிலிருந்து ஒரு தனிப்பட்ட முகப்புக் கடிதத்துடன் தபாலில் வந்து சேரும் இந்தப் படிவத்தை RGI குடியிருப்பாளர்கள் இனங்கண்டு கொள்வார்கள்.

**நான் இந்தப் படிவங்களை எங்கு பெறலாம்?**

நீங்கள் இந்தப் படிவங்களை பின்வருமாறு பெறலாம்:

- எமது 24 மணிநேர சேவைபெறுநர் பராமரிப்பு நிலையத்தை **416 981-5500** இலக்கத்தில் அழைத்தல்
- **help@torontohousing.ca** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்புதல்
- **torontohousing.ca/covid-19** என்ற இணையத்தளத்தில் படிவத்தைத் தரவிறக்கம் செய்தல்
- ஏப்ரல், 2020 ஆரம்பத்தில் ஒவ்வொரு குடியிருப்புக்கும் TCHC அனுப்பிவைத்த பொதியிலிருந்து

**மேலதிக தகவலை நான் எங்கு பெறலாம்?**

எமது சேவைபெறுநர் பராமரிப்பு நிலையம் பின்வரும் மின்னஞ்சல் அல்லது இலக்கத்தில் வாரத்தில் 7 நாட்களும் 24 மணிநேரமும் பணியாற்றுகிறது.

**help@torontohousing.ca** or **416-981-5500**.

**torontohousing.ca/COVID-19** என்ற இணையத்தளத்தில் நாம் தவிர்ப்பு உத்திகள் உட்பட COVID-19 தகவல்களை வெளியிட்டுள்ளோம்.

—— முடிவு ——